**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.76/2015**

**22.01.2026. அ.சா. 17 ராஜகோபால் த/பெ. முனுசாமி**

Accused present.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

நான் இறந்தவரின் அம்மா பானுமதி என்பவை விசாரித்தேன். விசாரணையில் அவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் தீர்த்தமலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையில் இறந்தவரின் மனைவி அ.சா.1 மீனாட்சி சம்பவத்திற்கு முன் தன் கணவரிடம் சண்டை போட்டுக்கொண்டு அம்மாவீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையில் மீனாட்சி போளூரில் உள்ள அவர் அம்மா வீட்டில் இருந்தபோது 31.08.2013 அன்று அவர் கணவர் அடிபட்டு மருத்துவமனையில் சேர்த்ததாக தன் மாமியார் கூறியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 01.09.2013 அன்று மதியம் ஆபரேஷன் நடந்ததாகவும் 02.09.2013 அன்று அதிகாலை 04.20 மணிக்கு இறந்துவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.11 கலைமகளை ஏன் விசாரித்தேன் என்று கேட்டால் அடிப்பட்டவர் முதலில் தீர்த்தமலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றதாக சொன்னதால் அவரை விசாரித்தேன். இரண்டு செங்கல்லையும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி நான்தான் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகசரில் எதிரியிடம் நான்தான் கையொப்பம் பெற்றேன் என்றால் நான்தான் வாங்கினேன். நான் கையொப்பம் பெற்றதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது என்றால் தவறுதலாக அவரிடம் பெறப்பட்டது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் "ஆற்றில் மறைத்து வைத்துள்ள இடத்தை காண்பிக்கிறேன் " என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட இரண்டு செங்கல்லும் முழு செங்கல்லா என்றால் அவற்றின் ஒவ்வொன்றிலும் ஒரு பக்கம் சிதைந்து இருந்தது. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் செங்கல் முழுமையாக உள்ளது என்றால் சிதைந்து உள்ளது. சதாரணமாக செங்கல் ஒரு செங்கல்லை கையால் எடுக்கும்போது தவறி விழுந்தால் உடைய வாய்ப்பு உண்டு எனறால் சரிதான். செங்கல் அனைத்து இடங்களிலும் கிடைக்கும் என்றால் கிடைக்கும். அதன்மீது வெள்ளை சுண்ணாம்பு பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எங்கோ வீடு பணி நடந்துகொண்டிருக்கும் இடத்தில் இருந்த அந்த இரு செங்கல்லையும் எடுத்து வந்து வழக்கிற்காக

சேர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்துக்களை 03.09.2013 அன்று காலை 8.00 மணிக்கு கைப்பற்றினேன். வழக்கில் சம்மந்தப்பட்ட மரு. கிருஷ்ணகுமாரை 03.09.2013 அன்று நான்தான் விசாரணை செய்தேன். நேரம் ஞாபகம் இல்லை. கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை 03.09.2013 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும்இல்லை என்றும் இறந்த சக்திவேல் உடல் உபாதையின் காரணமாக இறந்தார் என்றும், நான் இந்த வழக்கை சரிவர விசாரிக்காமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் தயார் செய்த பிரிவு மாற்றல் அறிக்கை 02.09.2013 அன்று காலை 08.05 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 01.09.2013 அன்று பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையும் , 02.09.2013 அன்று தயார் செய்த பிரிவு மாற்றல் அறிக்கையும் ஒரே தேதியில் அனுப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 01.09.2013 அன்று பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபரிடம் இருந்து வாக்குமூலங்கள் எதுவும் போலிசாரால் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சக்திவேல் இறந்த பிறகுதான் முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சக்திவேல் புகார் வாக்குமூலம் கொடுக்கும் அளவிற்கு சுயநினைவுடன் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.